# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


## தேவனுடைய வல்லமையின் கிரியைகள் மீண்டும் நிரூபிக்கப்பட்டது

### 14வது ரஷ்யா சர்வதேச கிறிஸ்தவ மருத்துவர்கள் மாநாடு




2017, அக்டோபர் 20 முதல் 21 வரை 14வது WCDN ரஷ்யா சர்வதேச மாநாடு ரஷ்யாவிலுள்ள செயிண்ட் பீட்டர்ஸ் பர்க்கில் நடைபெற்றது. உலக கிறிஸ்தவ மருத்துவர்கள் குழுமம் (World Christian Doctors Network) மருத்துவ தரவுகளின் அடிப்படையில் தேவனுடைய வல்லமையை நிரூபிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு செயல்படுகின்ற உலகமெங்கிலும் உள்ள கிறிஸ்தவ மருத்துவர்களை உள்ளடக்கியுள்ள ஒரு அமைப்பாகும்.

இந்த மாநாட்டில், ரஷ்யா, கொரியா, போலாந்து, ஸ்பெயின், இஸ்ரேல், பெலாரஸ் மற்றும் பல்கேரியா (படம் 2, 6 மற்றும் 9) உள்பட 13 நாடுகளிலிருந்து 400க்கும் மேற்பட்ட மருத்துவர்களும், மருத்துவ நிபுணர்களும் வந்து பங்குப் பெற்றனர். ஒவ்வொரு அமர்வும் (Session) ஆங்கிலத்திலும் ரஷ்யத்திலும் மொழி பெயர்க்கப்பட்டது. இந்த மாநாடு உள்ளூர் துதி பாடகர் குழுவினரின் துதிஆராதனை நிகழ்ச்சியோடு ஆரம்பமானது. பங்குப்பெற்ற ஒவ்வொரு நாடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. WCDNனின் தலைவர் டாக்டர். கில்பர்ட் சே, மாநாடு ஒழுங்கமைப்பு குழுவின் தலைவர் டாக்டர். ஒலெக் ஒஸ்டிரிகோ வரவேற்புரை வழங்கினார்கள். WCDN நிறுவனர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஊழியத்தைக் குறித்த DVD காணொளி காண்பிக்கப்பட்டது. ரஷ்யாவை சேர்ந்த செவிலியரும், மாநாடு ஆயத்த குழுவின் மேலாளருமான திருமதி. எலீனா லிட்வீனா முதல் சாட்சியை வழங்கினார். அறிவர். லீ அவர்களின் ஜெபத்தினால் கொடிதான மூட்டு வலியிலிருந்து பெற்ற தன்னுடைய சுகத்தை மருத்துவ ஆதாரத்தோடு விளக்கினாள் (அவளின் சாட்சி பார்க்க பக்கம் 3).

மாநாடு ஒழுங்கமைப்பு குழுவின் தலைவர், டாக்டர். ஒலெக் ஒஸ்டிரிகோ, மூளைக்கட்டி குறித்த சாட்சியை வழங்கினார்; WCDN ரஷ்யாவின் இயக்குனர், டாக்டர். லுயிசா முராடொவா, காசநோய் பற்றியும்; பல்கேரியாவைச் சார்ந்த டாக்டர். க்யுரில் ஸ்வில்லொவ், மாறுகண் பார்வை பற்றியும்; கொரியாவைச் சார்ந்த டாக்டர். ஜோன்சங் கிம், சிக்கலான எலும்புமுறிவு பற்றியும் சாட்சியை மருத்துவ ஆதாரத்தோடு தொகுத்து வழங்கினார்கள். WCDNனின் தலைவர் Dr. கில்பர்ட் சே, வியாதிகளின் வேர் மற்றும் நோவாவின் ஜலப்பிரளயம் குறித்த விரிவுரையை வழங்கினார். சிங்கப்பூரைச் சேர்ந்த டாக்டர். டேவிட் ஈயு, மூவான் மதுர தண்ணீரை (யாத். 15:25) குறித்து விரிவுரை யாற்றினார். மாநாடு ஆயத்த குழுவின் துணைத் தலைவர், டாக்டர். நிக்கோலாய் இயுச்சிஸ், கடற்பகுதியில் இருந்த உப்புத்தண்ணீர் அறிவர். லீ அவர்களின் ஜெபத்தினால் மதுரமான குடிப்பதற்கு ஏற்ற தண்ணீராய் மாறின மூவான் மதுர தண்ணீர் இடத்திற்குப்போன தன்னுடைய அனுபவத்தை சாட்சியாகச் சொன்னார். திரளான மருத்துவர்கள் மூவான் மதுர தண்ணீரை பருகினர், வாஞ்சையுள்ள இருதயத்தோடு தங்கள் வீடுகளுக்கு அதைப் பயன்படுத்தும்படி எடுத்து சென்றனர் (படம் 3, 5).

இரண்டாவது நாளில், டாக்டர். விட்டாலி ஃபிஷ்பெர்க், ‘பரலோகம்’ என்ற தலைப்பில் ஒரு சிறப்பு உரை யாற்றினார். டாக்டர். கில்பர்ட் சே மற்றும் டாக்டர். வாஹி புனியாட்யன் இருவரும் முறையே அப்பண்டிஸ் மற்றும் குருட்டுத்தன்மையை பற்றி சாட்சியை சொன்னார்கள் (கூடுதலான விளக்கங்களுக்கு பக்கம் 4ஐ பார்க்கவும்). பிறகு, 2018 WCDN போலாந்து கருத்தரங்கு ஆயத்தக்குழுவினர் மேடையில் வந்து மரியாதைச் செலுத்தினர்; மீண்டும் அடுத்த ஆண்டில் சந்திப்போம் என்று உறுதியளித்தனர் (படம் 8). அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கு பாராட்டு மடலை வழங்கிய பிறகு மாநாடு நிறைவுபெற்றது (படம் 4).

அறிவர். லீ அவர்களின் “*தேவன் பரிகாரி*” என்னும் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட “வியாதிகளுக்கான வேர்” என்ற விரிவுரையானது இந்த மாநாட்டில் மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இந்த விரிவுரைக்குப் பிறகு அநேகர், ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிப்பது எப்படி, பயம் மற்றும் நோய்களுக்கு இடையிலான வேறுபாடு என்ன போன்ற பல கேள்விகளை கேட்டனர். அவர்களின் கேள்விகளில் தெரிந்த வாஞ்சையானது அவர்களின் ஆவிக்குரிய தாகத்தை நிரூபித்தது.

கூடுதலாக, அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஆதியாகம விரிவுரை பிரசங்கத்தின் அடிப்படையில் நோவாவின் ஜலப்பிரளயத்தைக் குறித்த வீடியோ காண்பிக்கப்பட்டது. பங்குப் பெற்றவர்கள் மிகவும் ஈர்க்கப்பட்டவர்களாய் வீடியோவில் வழங்கப்பட்ட விளக்கங்கள் வேதாகமத்தின் அடிப்படையிலும் ஆவிக்குரிய ரீதியிலும் இருந்தது என்றனர். அவர்கள் அந்த வீடியோவை தங்கள் சபைகளிலும், மருத்துவமனைகளிலும் வருகிற மக்களுக்கு காண்பிக்கும்படி அந்த வீடியோ வேண்டுமென கேட்டனர்.

மருத்துவர். ஒலெக் ஒஸ்டிரிகோ, மாநாடு ஆயத்தக்குழுவின் தலைவர் சொன்னது, “வியாதிகளின் காரணத்தையும், ஆவிக்குரிய சுகத்தையும் பற்றி ரஷ்ய மருத்துவர்களான நாங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இங்கு வழங்கப்பட்ட விரிவுரைகள் எங்களுக்கு அதிகமாக உதவியது. அந்த செய்திகளுக்காக அநேக மருத்துவர்கள் தங்களின் உள்ளங்கனிந்த நன்றிகளை தெரிவித்தனர்.”

ஒரு முஸ்லீம் மருத்துவர், “தேவனுடைய வல்லமையின் கிரியைகள் ஆச்சரியமளிக்கிறது! இதுவரை நான் அறிந்திராத புதிய ஆவிக்குரிய உலகங்களை உணர்ந்தேன்” என்று சொன்னார்

இந்த மாநாட்டில், தென்கொரியாவிலுள்ள மான்மின் தலைமை சபையின் ஒளியின் சப்தம் பாடல் குழுவினர் உள்ளூர் மொழிகளில் துதித்தனர்; ரஷ்ய பாரம்பரிய நடனத்தை ஆடினர். அவர்களின் உற்சாக நிகழ்ச்சிகள் இந்த மாநாட்டில் கிருபையையும், உணர்வையும் பெருகச் செய்தது (படம் 1).

அறையின் நுழைவுப் பகுதியில் அறிவர். லீ அவர்களின் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவை பங்குப் பெற்ற அநேகருடைய கவனத்தை ஈர்த்தன. ஆவிக்குரிய செய்திகள்மீது தாங்கள் கொண்டுள்ள ஆவிக்குரிய தாகத்தை மருத்துவர்கள் வெளிப்படுத்தினார்கள் (படம் 7).

இந்த மாநாட்டைப் பற்றிய செய்திகள் அடங்கிய தொகுப்பு ரஷ்யாவிலுள்ள முதன்மையான கிறிஸ்தவ தொலைக் காட்சியான டிபிஎன் ரஷ்யாவில் ஒரு சிலமுறை அறிவிக்கப்பட்டது.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# பரிபூரணமான பதில்களை பெறுவது எப்படி

"ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும். அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும். நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்." (மல்கியா 4:2)

இன்றைய வேத பகுதியில், "நீதியின் சூரியன்" என்பது நம்முடைய ஆண்டவராகிய மேசியாவைக் குறிக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் வியாதியோடிருக்கும்போது, ஆண்டவருடைய நாமத்தில் அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கைச் செய்து தேவனிடத்தில் ஜெபித்தால், தேவன் தம்முடைய சுகமாக்கும் கற்றைகளால் வியாதிகளை சுகமாக்குவார். சுகமாக்கும் கற்றை என்பது எவ்வகையான வியாதியையும் எப்பேர்பட்ட நபருக்கும் வயது மற்றும் ஆரோக்கிய நிலையை பொருட்படுத்தாமல் சுகமாக்கக்கூடிய காணக்கூடாத ஒளியாகும். மேலும் அது எதிர்மறையான பக்க விளைவுகளை கொண்டு வராது. ஆனால் எழுதப்பட்டபடியே, அவருக்குப் பயந்தவர்களுக்கு தேவன் தமது சுகமாக்கும் ஒளியை தருகிறார்.

### 1. தேவனுக்குப் பயப்படுகிறவர்கள்

நீதிமொழிகள் 8:13ல் வாசிக்கிறோம், "தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்; பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன்." தேவனுக்கு உண்மையாக பயப்படுகிறவர்கள் இயல்பாகவே தீமையை வெறுப்பர். நீங்கள் யாரையாகிலும் நேசித்தால் நீங்கள் நேசிக்கிற நபர் வெறுக்கிற எதையும் நீங்கள் செய்யமாட்டீர்கள். அந்த நபருக்கு மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் தர முயற்சிப்பீர்கள். இதேபோல்தான் தேவனோடுள்ள உங்கள் உறவுக்காகும்.

அன்பின் தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை தியாகம் செய்தார். தம்முடைய ஒரே பேறான குமாரனை கிருபாதார பலியாக ஒப்புக்கொடுத்து அதன் வழியாக பாவிகள் காப்பாற்றப்படுவதற்கு வழி திறந்தார். தேவனுடைய இந்தப் பெரிதான அன்பை நீங்கள் உணர்ந்துக்கொண்டால், உங்களால் தேவனுக்குப் பயப்படாமல் இருக்க முடியாது. தேவன் வெறுக்கிற ஒன்றை உங்களால் செய்ய முடியாது. தேவன் வெறுக்கிற பாவத்தையும் தீமையையும்கூட நீங்கள் களைந்துப் போடுவீர்கள்.

ஆனால் பல ஜனங்கள் அவர்கள் தேவனை நேசிப்பதாகவும், அவருக்குப் பயப்படுவதாகவும் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் தீமையை வெறுப்பதில்லை. அவர்கள் தீமையை வெறுக்கிறோம் என்று நினைக்கலாம். ஆனால், அவர்கள் இன்னமும் தீமையை இருதயத்தில் வைத்திருப்பார்கள். எது தீமையோ அதைப் பார்ப்பார்கள். தீமையை வார்த்தைகளிலும் செயல்களிலும் காட்டுவார்கள். இதன் அர்த்தம் அவர்கள் தங்கள் இருதயங்களின் ஆழத்திலிருந்து உண்மையில் தீமையை வெறுக்கவில்லை என்பதாகும். மேலும், அந்தளவில், அவர்களால் அவர்கள் தேவனை நேசிப்பதாகவும் அவருக்குப் பயப்படுவதாகவும் கூற முடியாது.

### 2. பரிபூரணமான பதில்களைப் பெறுவதற்கு

#### 1) தேவனுக்கு விரோதமான பாவச்சுவர்களை நீங்கள் அழிக்க வேண்டும்.

தேவன் தம்முடைய பிள்ளைகள் எதைக் கேட்டாலும் அதற்குப் பதில்தர விரும்புகிறார். அதை அடையப்பெறுவதற்கு, அவர் அவர்களுக்கு வேத வார்த்தைகளை தருகிறார். நாம் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தால், நம்முடைய ஆத்துமாக்கள் செழித்தோங்கும், நம்மோடு எல்லாம் நன்றாகச் செல்லும். நாம் ஆரோக்கியமாக இருப்போம். எல்லாவற்றிலும் செழிப்பாகவும் இருப்போம். ஆக, தேவன் தீர்க்க வேண்டும் என கேட்கிற பிரச்சனை ஏதாகிலும் உங்களுக்கு இருந்தால், நீங்கள் அவருடைய வார்த்தைகளுக்கு அதி ஊக்கமாக கீழ்ப்படிய வேண்டும்.

யாரோ ஒருவரால் நீங்கள் சோதனைக்குள் விழுவதால் பொருளாதார நெருக்கடிக்குள் இழுக்கப்பட்டு விடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது, நீங்கள் அந்த நபரை வெறுக்கக்கூடாது. மாறாக நீங்கள் பணத்திற்காக இருந்த உங்கள் பேராசையை வெறுக்க வேண்டும். உங்கள் சுயநல நோக்கங்களையும் உங்களுக்கு உரியதல்லாததை பெறுவதற்கு இருந்த உங்கள் ஆசையையும் வெறுக்க வேண்டும். உங்கள் இருதயத்திலிருந்த அப்பேர்பட்ட குணாதிசயங்களால் தான் நீங்கள் வஞ்சிக்கப்பட்டீர்கள் என்பதை உணர வேண்டும். அந்தக் குணாதிசயமே நீங்கள் சோதிக்கப்பட காரணம் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த தீமையான வஸ்துக்களை நீங்கள் கண்டறிந்ததால் நீங்கள் நன்றியும் செலுத்த வேண்டும். அந்த தீமைகளை நீங்கள் இருதயத்தில் வைத்திருக்கும்வரையில், என்றாகிலும் ஒரு நாள் நீங்கள் மறுபடியும் சோதனைக்குள் விழுந்து விடுவீர்கள். ஆக, அடிப்படையான காரணிகளாயிருக்கிற தீமைகளை களைந்துப்போடுவது என்பதே நிச்சயமான ஞானமான தீர்வாக இருக்கிறது (யாக்கோபு 1:14–15).

யாத்திராகமம் 15:26ல் வாசிக்கிறோம், "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்." சொல்லப்பட்டபடி யாரானாலும் அவர்கள் தேவனுடைய வார்த்தையின்படி வாழ்ந்தால் மட்டுமே வியாதியில்லாமல் தேவனால் பாதுகாக்கப்படுவார்கள்.

வேறு வார்த்தையில், நீங்கள் அவரால் பாதுகாக்கப்படவில்லை என்றால் நீங்கள் அவருடைய சித்தத்திற்கு புறம்பாக ஏதோ செய்துள்ளீர்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும் (ஏசாயா 59:2). ஆகவே, பரிபூரணமான பதில்களைப் பெறுவதற்கு, மிக முக்கியமான காரியம் என்னவென்றால், தேவனுக்கும் நமக்கும் நடுவாக நிற்கிற பாவசுவர்களை அழிக்க வேண்டும் என்பதே. மேலும் நாம் தேவனை பிரியப்படுத்துகிற நற்குணம் மற்றும் விசுவாசத்தின் கிரியைகளை குவித்து வைக்கும்போது, நாம் பதில்களை அதிவேகமாக பெற முடியும்.

கூடுமானவரையில் தேவன் நமக்கு சிறந்த காரியங்களையே கொடுக்க விரும்புகிறார். நம்முடைய விசுவாசத்தின் அளவுக்கு ஏற்ப அவர் ஏற்படுத்திய அளவை நாம் சந்தித்தவுடனே, அவர் நமக்குப் பதில் தருகிறார். ஆகவே தான் புதிய விசுவாசிகள் பதில்களை வேகமாக பெற்றுக் கொள்கின்றனர். ஏற்கனவே தேவ கிருபையை அனுபவித்தவர்களிடமும் நீண்ட கால விசுவாசிகளாய் இருப்பவர்களிடடும் தேவன் எந்த காரியத்தையோ அதிகமாக எதிர்பார்க்கிறார். அவர் அவர்கள் முன்பைவிட அதிக நற்குணத்தையும் பெரிய விசுவாசத்தையும் காட்ட விரும்புகிறார். ஆகவே, நீங்கள் உங்கள் பிரச்சனைகளுக்குப் பதிலை பெற விரும்பினால், நீங்கள் பிரச்சனையை தேவனுடைய கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். நீங்கள் உடனடி தீர்வை மட்டுமே விரும்பக்கூடாது. ஆனால் அதின் அடிப்படையான காரணத்தை எவ்வாறு சரி செய்வது என்பதைக் குறித்து யோசிக்க வேண்டும். அப்போது, நீங்கள் பதிலுக்காக காத்திருக்கையில் நீங்கள் படபடப்பாக இருக்க மாட்டீர்கள் அல்லது பொறுமையற்றவர்களாக இருக்க மாட்டீர்கள். மாறாக அந்தக் காலக்கட்டம் நீங்கள் உங்களை ஆவிக்குள்ளாக மாற்றுவதற்கு ஆசீர்வாதமான நேரம் என்று அறிந்திருப்பதால் நீங்கள் நன்றியுணர்வோடு இருப்பீர்கள்.

#### 2) பாவச்சுவரை நீங்கள் அழித்தபின் மறுபடியும் திரும்ப அதைக் கட்டக்கூடாது

சில மக்கள் தங்கள் பதில்களைப் பெறுவதில் மிகவும் பொறுமையற்றவர்களாயிருப்பார்கள். பதில்களைப் பெறுவதற்கு அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களைப் பழக்கதோஷமாக செய்வார்கள். ஆனால் பதில்களை ஏன் அவர்கள் பெறவில்லை என்று கேட்பார்கள். தேவனுடைய வழியை பின்பற்றாமல் தங்கள் இஷ்டப்படி அவர்கள் பொருத்தனை ஜெபம் செய்வார்கள். பாதியில், அவர்கள் ஏமாற்றமடைவார்கள், மனமுடைந்துப் போவார்கள். அவர்கள் முறுமுறுத்து சலிப்புத் தட்டுவார்கள். அது தேவனுக்கும் அவர்களுக்கும் இடையில் இன்னும் பெரிய பாவச்சுவரை உருவாக்கிவிடும். அதனால் பதில்கள் அவர்களை விட்டு மிக தூரம் சென்றுவிடும்.

பின்பு, அவர்கள் மனந்திரும்பி மீண்டும் ஜெபிப்பார்கள். ஆனால் இந்த சுழற்சி தொடர்ந்துக் கொண்டேயிருக்குமானால், அவர்களால் பரிபூரணமான பதில்களைப் பெற இயலாது. இந்த சூழ்நிலையை நாம் இவ்வாறு வைத்துப் பார்ப்போம். தேவனுக்கு விரோதமாக 10 செ.மீ அளவு பாவச்சுவர் உங்களுக்கு உள்ளது. நீங்கள் ஜெபித்து, உபவாசித்து, மனந்திரும்புகிறீர்கள். அதனால் 5 செ.மீ. அளவு அழிந்துவிட்டது. மற்ற 5 செ.மீ. அளவு இன்னமும் உள்ளது. நீங்கள் பரிபூரணமான பதிலைப் பெற இன்னமும் சமயம் வரவில்லை, ஆனால் நீங்கள் பதில்வர எதிர்பார்க்கிறீர்கள். நீங்கள் எதிர்பார்த்த பதில் இன்னமும் வரவில்லை என்பதால் நீங்கள் நன்றி செலுத்தாமல், "என்னால் ஏன் பதிலைப் பெற முடியவில்லை?" என்று கூறி முறுமுறுக்கிறீர்கள். அப்படி செய்வதால், மீண்டும் உயரமாய் பாவச்சுவரை கட்டி எழுப்பி விடுகிறீர்கள்.

ஜனங்கள் பொதுவாக, தாங்கள் எதையெல்லாம் முயற்சித்தார்கள் என்பதை நன்கு நினைவு கூறுவார்கள். ஆனால் தாங்கள் என்ன தவறு செய்தோம் அல்லது தங்கள் வார்த்தைகளில் உள்ள பிழையை நினைவுகூற மாட்டார்கள். ஆகவே, அவர்கள் பதில் தாமதமாக வருகிறது என்று நினைப்பார்கள். நீண்ட காலமாக அவர்கள் கடுமையான முயற்சித்தாலும்கூட அவர்கள் செய்வது உண்மையில் வேலை செய்யவில்லை.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் ஏற்படுகிற மாற்றங்களே மிக முக்கியமான காரியம் என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். பாதியில் நம்முடைய மனதை மாற்றிக்கொள்ளாமல் உண்மையுள்ள நம்முடைய தேவனில் நமக்கு நம்பிக்கையும் விசுவாசமும் இருக்கவேண்டும். நாம் தேவனுடைய வார்த்தை அனைத்தையும் நற்குணத்தில் நினைத்து பொறுமையுள்ளவர்களாயிருக்க கற்றுக்கொள்ளும்போதுதான் நாம் பரிபூரணமான பதில்களை அதிசீக்கிரம் பெற முடியும். நம்முடைய ஆத்துமா செழித்தோங்குவது போல, நாம் எல்லாவற்றிலும் வாழ்ந்து செழிப்பது என்பது அவருடைய நீதியாகும். ஆக, நாம் எந்தளவாய் நம்முடைய ஆத்துமாவை பண்படுத்துகிறோமோ, அந்தளவாய் நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களை அதிகமாயப் பெறுவோம்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, தேவன் உண்மையுள்ளவர் எல்லாவற்றையும் தம்முடைய நீதியிலும் அன்பிலும் செய்கிறவர். உண்மையில் நீங்கள் அவருக்குப் பயந்தால், தேவனிடத்திலிருந்து உங்களை தடைபண்ணுகிற எல்லாவற்றையும் அகற்றி, அதை திரும்பச் செய்யக்கூடாது. அதாவது, நீங்கள் தீமையை வெறுத்து அதைக் களைந்துப்போட்டு நற்குணத்துடன் அதை இடமாற்று செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் உங்கள் அன்பை நீங்கள் காட்டும்போது, நீங்கள் கேட்பது எவையானாலும் தேவன் பதிலளிப்பார்.

நீங்கள் தேவனை நேசித்துப் பயப்படுவதால் பரிபூரணமான பதில்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்று ஆரோக்கியமாயிருக்க வேண்டும் என்று ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.


**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]



அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்தை அவள் பெறுகிறாள்.



ஜெபத்திற்கு முன்பு
காசநோய் நுரையீரலை அழித்துவிட்டதை இரண்டு நுரையீரலிலும் பார்க்க முடிகிறது.



ஜெபத்திற்கு பின்பு
முன்பு பரவியிருந்த காசநோயின் அறிகுறி ஏதும் இல்லை.

## காசநோய்

**Dr. லூயிசா முரடோவா, ரஷ்யா**



**துதி ஆராதனை வீராங்கனை ரோஸ் ஹான்,** நவம்பர் 2003ல் ஒரு கலைநிகழ்ச்சிக்காக ஆயத்தமாகி கொண்டிருந்தபோது அதிகபடியான சோர்பை உணர்ந்தாள். அவள் பெலவீனத்தின்மேல் பெலவீனமாகிக் கொண்–டிருந்தாள். தொடர்தேர்ச்சியாக வரட்டு இருமல், எடை இழப்பு ஏற்பட்டது. என்ன தவறு ஏற்பட்டது என்பதை அறிவதற்கு அவள் மருத்துவமனை சென்றாள். அவளது வலது நுரையீரல் பகுதி முழுவதையும், இடது நுரையீரல் பகுதியில் பெரும்பான்மையான பகுதியையும் காசநோய் பாக்டீரியா தாக்கியிருப்பதாக பரிசோதனை காண்பித்தது. மருத்துவர் அவளிடம் உடனடி மருத்துவ சிகிச்சை செய்யாவிட்டால் அந்த பாக்டீரியா இரத்தத்தின் மூலமாக மூளை, கல்லீரல் அல்லது குடல்கள் போன்ற சரீரத்தின் பிற பகுதிகளுக்கு நகர்ந்து செல்லும் என்று கூறினார். கூடுதலாக சிகிச்சை மேற்கொண்டாலும்கூட, அவளது நுரையீரல் பாதிப்படைந்தே இருக்கும், அது அவளை பாடவிடாதபடி செய்யும் என்றும் மருத்துவர் கூறினார்.

அவள் இருமியபோது, அவளது விலா எலும்பு உடைந்ததுபோன்ற அளவுக்கு மிஞ்சிய மிதிப்பதைப் போன்ற வேதனையை உணர்ந்–தாள். அவளுக்கு சுவாசிப்பது கஷ்டமாக இருந்தது. அவள் உணவை கண்டபோது, வாந்தி எடுத்தாள். உயரிய காய்ச்சலினால் அவளால் தூங்க முடியவில்லை. அவள் எலும்பும்தோலுமாக மாறினாள். காசநோய் கிருமி காற்றின் வழியாக மற்றவர்களுக்கு பரவுகின்ற காரணத்தால் அவள் தன் குடும்பத்தை விட்டு விலக்கப்பட்டிருக்க வேண்டியிருந்தது. அவளுடைய வியாதியில், தனிமையில், உதவியற்ற சூழலில் சுவாசிப்பதின், ஜெபிப்பதின், துதிப்பதின் மதிப்பை உணர்ந்தாள். அவளால் நடக்க முடியாத அளவு மிகவும் பெலவீனமாய் மாறிவிட்டாள்.

இந்தக் காலக்கட்டத்தில் தான் அவள் மரணத்தருவாயை சந்தித்தாள். அப்போதுதான் அவள் தனக்காக கண்ணீரோடு ஜெபித்த அறிவர். ஜேராக் லீ அவர்களது அன்புக்கும் கிருபைக்கும் கைமாறு செலுத்தும்படியான வாய்ப்பு ஒன்றை தேவன் தனக்கு தரும்படியாக கேட்டு ஜெபித்தாள். அவளது குடும்பமும் திருச்சபை அங்கத்தினர்கள் பலரும் அவளுக்–காக ஜெபித்து வந்தார்கள். அவள் அறிவர். லீ அவர்களது வல்லமையை விசுவாசித்த–படியால், அவள் உலகப்பிரகாரமான எந்த ஒரு முறையையும் சாராமல் அவரது ஜெபத்தின் மூலமாக மட்டுமே சுகத்தைப் பெற விரும்பினாள். அவள் அறிவர். லீ அவர்களது ஜெபத்தைப் பெற்ற பிறகு, அவர் தன் இதயத்தில் அவளை சுமந்து ஜெபிக்கிறார் என்று கேள்விப்பட்டபின் அபாய கட்டத்தை தாண்டினாள். அவள் இதைக் கேள்விப்பட்ட நாளிலிருந்து ஆச்சரியமான மாற்றங்களை தன் சரீரத்தில் உணர துவங்கினாள். அவள் பார்க்கவே விரும்பாத உணவை சாப்பிட துவங்கினாள். நாளுக்கு நாள் பெலனடைந்தாள்; இருமல் குறைந்து கொண்டேயிருந்தது. இறுதியாக அது நின்று விட்டது. அறிவர். லீ அவர்கள் அவளது சொப்பனத்தில் இரு முறை தோன்றிய பின்னர் அவளது சரீரம் அதிகவேகமாக தேர்ச்சியடைந்தது.

மே 2005ல், அவள் மருத்துவமனைக்குச் சென்று இரத்த வளர்ம பரிசோதனை எடுத்தாள். ஆகஸ்டில், மூன்று மாதங்களுக்குப் பிறகு, பரிசோதனை முடிவுகள் காசநோய் பாக்டீரியாக்கள் அனைத்தும் மறைந்துவிட்டன என்றும், நுரையீரல் சுத்தமாக உள்ளன எனவும் காட்டியது. மனிதர்களுடைய எண்ணங்களால் புரிந்துகொள்ள முடியாத அற்புதம்தான் அது. ஹலேலூயா! இன்று அவள் உலகறிந்த துதி ஆராதனை வீராங்கனை ஆவார்.



## குருட்டுத்தன்மை

**Dr. வாகே புனியாட்யன், அர்மெனியா**





**சகோதரர் சாங்யோங் பார்க், வயது 52,** புகைப்படம் 1, 1990ல் கார் விபத்துக்குள்ளானார். அது அவருடைய மூளையில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. அதற்கு அவர் அறுவை சிகிச்சை மேற்கொண்டார். அறுவை சிகிச்சைக்குப் பிற்பாடு, அவரது இடது கண் முற்றிலுமாக குருடாகிவிட்டது. அந்த கண்ணினால் அவரால் ஒளியைகூட பார்க்க முடியவில்லை. பிற்பாடு, அவர் மான்மின் மத்திய திருச்சபையில் பங்குப்பெறலானார். ஆகஸ்டு 2016ல் அவர் மான்மின் கோடை ஏகாந்தத்திற்கு சென்று, தேவனுடைய வல்லமையை அனுபவித்தார். தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களது வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் கண்களில் குளுமையை உணர்ந்தார். அவரது இருகண்களுமே ஒளியடைந்தன. இறுதியாக, அவர் பார்க்க ஆரம்பித்தார்.

**சகோதரர் கேகேசுரன், வயது 62,** புகைப்படம் 2, விபத்தில் அவரது தலை பாதிக்கப்பட்ட போதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அவரது இடது கண்ணில் பார்வை இழந்தார். இறுதியாக பார்வை முற்றிலும் இழந்தார். அவர் மனஅழுத்தத்தினாலும் வியாகுலத்தினாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். பிற்பாடு, அவர் மான்மின் அங்கத்தினராய் அறிவர். லீ அவர்கள் ஜெபித்ததான கைக்குட்டை ஜெபத்தைப் பெற்றுக்கொண்டார் (அப்போஸ்தலர் 19:11–12). ஜெபத்தினம் மூலமாக, அவரது கண்பார்வை திறன் இடதுகண்ணில் 0விலிருந்து 0.03 ஆகவும், வலது கண்ணில் 0.5லிருந்து 0.7 ஆகவும் தேர்ச்சியடைந்தது.

1






ஜெபத்திற்கு முன்: இடது கண்ணில், கண் உணர்வு ஏதுமில்லை. அது குருட்டுத்தன்மையை காண்பிக்கிறது.
ஜெபத்திற்கு பின்: அந்த கண்ணில் 0.15 பார்வையுள்ளது.

2




ஜெபத்திற்கு முன்: இடது கண் பார்வை 0
ஜெபத்திற்கு பின்: அது இப்போது 0.03

## மூட்டுவாதம்

**திருமதி எலீனா லிட்வீனா, ரஷ்யா**



இது என்னுடைய சாட்சி. ஒரு நாள், எனது மூட்டு வீங்கி மிகவும் வேதனை எடுத்தது. MRI பரிசோதனை எனது ஜவ்வு தேய்ந்துவிட்டது எனவும் பயங்கர மூட்டு வாதமும் உள்ளது எனக் காட்டியது. அறிகுறிகள் மிக மோசமானது. என்னால் இரண்டு மணிநேரத்திற்கு மேல் நடக்க முடியாது. ஆனால் நான் கொரியாவில் மான்மின் மத்திய திருச்சபைக்குச் சென்றபோது, நான் அறிவர். ஜேராக் லீ அவர்களது ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். எனது கால்கள் லேசாக உணர்ந்தேன். படிக்கட்டில் மேலே கீழே ஏறி இறங்கும்போது எனக்கு வலியே இல்லை. அடுத்தநாள், எல்லா வலியும் போய் விட்டது. வீக்கமும் வத்திவிட்டது. அப்போதிருந்து ஒரு வருடம் ஆகவிட்டது, நடப்பதில் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.






ஜெபத்திற்கு முன் : அவர்களது ஜவ்வு கிழிந்து மெல்லிசாக உள்ளது. நோய் தொற்றும் உள்ளது.
ஜெபத்திற்கு பின் : படிக்கட்டில் அவர்கள் எளிமையாக நடக்க முடிகிறது.

# பிதாவாகிய தேவனே நம் சிறந்த மருத்துவர்!


**"...நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" (யாத்திராகமம் 15:26)**

WCDN (World Christian Doctors Network – உலக கிறிஸ்தவ மருத்துவ குழுமம்) என்ற பெயரின்கீழ் உலகமெங்கிலும் உள்ள கிறிஸ்தவ மருத்துவர்கள் பரிசுத்த வேதாகமத்தின் நம்பகத்தன்மையை நிரூபிக்கும்படி ஒன்றாய் இணைகின்றனர். ரஷ்யாவில் நடைபெற்ற 14வது சர்வதேச கிறிஸ்தவ மருத்துவ மாநாட்டில் மருத்துவ ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்ட சில சாட்சிகளைப் பார்ப்போம்.

## கடுமையான குடல்வால்அழற்சி


**Dr. கில்பர்ட் சே, கொரியா**





ஜெபத்திற்கு முன்பு: குடல்வாலழற்சிக்கு காரணமான கல் கண்டறியப்பட்டது, அது அதிக பாதிப்போடிருந்தது.
ஜெபத்திற்கு பின்பு: குடலிருந்த கல் இல்லை, வீக்கம் முழுவதும் குறைந்தது.




ஜெபத்திற்கு முன்பு: குடல்வால்அழற்சி பாதிப்பும், வீக்கமும்.
ஜெபத்திற்கு பின்பு: குடல்வால்அழற்சி இயல்பானது.




ஜெபத்திற்கு முன்பு: குடல்வால் அழற்சிக்கு காரணமான குடற்கல் கண்டறியப்பட்டது. அது அதிக பாதிப்போடிருந்தது.
ஜெபத்திற்கு பின்பு: குடலிருந்த கல் இல்லை, வீக்கம் முழுவதும் குறைந்தது.

கடுமையான குடல்வாலழற்சி (அப்பண்டிக்டிஸ்) மிகப் பெரிதான வலியை உண்டாக்கும். குடல் அறுவைச் சிகிச்சையை தவிர வேறு வழியில்லை. ஆனால் அறுவைச் சிகிச்சை இல்லாமல் அநேகர் அதிலிருந்து தேவனுடைய சுகத்தை அனுபவித்–துள்ளனர்.

**கண்காணியாள் க்யங்வா லீ, வயது 58,** (படம் 1) கடுமையான வயிற்றுவலியோடு தொடர்ந்து வாந்தி எடுத்துக்கொண்டிருந்தாள். அவள், மே 30, 2010 அன்று சிடி ஸ்கேன் எடுத்தாள். அதில் அவளுடைய வயிற்றின் வலது கீழ்ப்பகுதியில் குடல்வாலழற்சிக்கான அறிகுறிகள் இருந்தது. ஆனால் அவள் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டாள். பிறகு ஜூன் 6 அன்று, இன்னொரு முறை சிடி ஸ்கேன் எடுத்துப் பார்த்தபொழுது குடல்வாலழற்சி தற்போது இல்லை எனவும், முன்பிருந்த அறிகுறிகளில் நல்ல முன்னேற்றம் இருப்பதாகவும் அது காண்பித்தது.

**கண்காணியாள் யங்ஜூ கிம், வயது 47,** (படம் 2) வயிற்றுவலியினால் அவதிப்பட்டாள். ஜூலை 30, 2014 அன்று எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் பரிசோதனையில், அவளுடைய கீழ்வயிற்றின் வலது பக்கத்தில் குடல்–வாலழற்சி இருப்பதாவும், கிருமிகள் நிமித்தம் வயிறு வீங்கியிருப்பதும் கண்டறியப்பட்டது. கடுமையான வலியினால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தபொழுது, அவள் தேவனுக்கு முன்பதாக மனந்திரும்பி, அறிவர். லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டாள். அதன்பிறகு அவள் எடுத்த சிடி ஸ்கேன் பரிசோதனையில் அவளுக்கு குடல்வாலழற்சிக்கான எவ்வித அறிகுறியும் இல்லை என நிரூபிக்கப்பட்டது.




**கண்காணி மியங்ஜின் ஷின், வயது 36,** (படம் 3) இரண்டு நாட்களாக கடுமையான வயிற்று வலியினால் அவதிப்பட்டார். மார்ச் 5ம் தேதி அவருக்கு எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் பரிசோதனையில் கீழ்வயிற்றின் வலது பகுதியில் ஒரு கல் அல்லது குடற்கல்லைச் சுற்றிலும் கிருமிகள் பரவியிருந்தது கண்டறியப்பட்டது. அது குடல்வாலழற்சியின் பொதுவான ஒரு அறிகுறியாகும். அவருக்கு குமட்டல் எடுத்தது, கடுமையான வலியின் காரணமாக வாந்தியும் எடுத்தார். ஆனால் அவர் மனந்திரும்பிய பிறகு அவருடைய அறிகுறிகளில் முன்னேற்றம் காணப்பட்டது. அவர் அறிவர். லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்ற பிறகு, மறுபடியும் எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் பரிசோதனையில் குடல்வால–ழற்சிக்கான எவ்வித அறிகுறிகளும் தென்படவில்லை. அல்லேலூயா!

## மாறுகண் பார்வை

**Dr. க்யுரில் ஸ்வில்லொவ், பல்கேரியா**




**சகோதரர் கியுசன் இயுன், வயது 17,** பிறவியிலிருந்தே கண் பார்வை (கோணலான பார்வை) ஊனத்தால் பாதிக்கப்பட்டிருந்தார். ஒன்றைப் பார்க்க வேண்டுமென்றால் அவர் தனது தலையை வலது பக்கமாக திருப்ப வேண்டும். அவருக்கு பக்கத்தில் உள்ளவர்கள் தெளிவாகப் பார்க்குமளவிற்கு அவருடைய கருவிழி மிக அபாய–கரமானதாக ஆடிக் கொண்டிருக்கும். அவருக்கு அறுவைச் சிகிச்சை மிகவும் ஆபத்தானதாக அமையும் எனவும், அது நன்றாய் முடியும் என்பதற்கு தன்னால் உத்தரவாதம் தர முடியாது எனவும், அவருடைய மருத்துவர் சொல்லிவிட்டார்.

ஒரு நாளில், அவர் தேவனிடத்திலிருந்து சுகத்–தைப் பெறவேண்டுமென தன் மனதில் தீர்மானித்–தார். அவர் பொருத்தனை ஜெபத்தை ஏறெடுத்தார், தேவன் வெறுக்கிற அனைத்து காரியங்களையும் தன் திறன்பேசியிலிருந்து அழித்தார். பிறகு, அவர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டார். ஜெபத்திற்குப் பின்பு, அவர் பிறவி மாறுகண் ஊனத்திலிருந்து சுகத்தைப் பெற்றார். தற்போது கருவிழி ஆடவில்லை, அவர் எல்லாவற்றையும் நேராகப் பார்க்கிறார்.






ஜெபத்திற்கு முன்பு: அவருடைய இடது கண்ணில் கோணலான கண்பார்வை உள்ளது.
ஜெபத்திற்கு பின்பு : இரண்டு கண்களும் இயல்பாக உள்ளது.

## சிக்கலான எலும்பு முறிவு

**Dr. ஜோன்சங் கிம், கொரியா**




**மூத்த கண்காணியாள் ஜியமொக் பார்க், வயது 54,** பிப்ரவரி 6, 2017 அன்று படிக்கட்டுகளில் இருந்து விழுந்து விட்டாள். அதனால் அவளுடைய கால் முன்னெலும்பு, கணுக்கால் வெளியெலும்பு மற்றும் முழங்கை எலும்பு முறிந்தது. அது கடுமையான பாதிப்பாக இருந்ததால், சில அறுவைச் சிகிச்சை செய்தாலும் எலும்புகள் ஊனமாகி குறுகிவிடும் என்று அவளுடைய மருத்துவர் சொல்லிவிட்டார். அது அவளை ஊன–முற்றவளாக செய்திட அதிக வாய்ப்பிருந்தது. எப்படியிருந்தாலும், அவள் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தை விபத்து நடந்த அன்று பெற்றுக்கொண்டு, மருத்துவமனையிலிருந்து வந்துவிட்டாள். இப்பொழுது அவள் பரிபூரண சுகமாகி, ஊன்றுக்கோலின்றி நடக்கின்றாள்.







ஜெபத்திற்கு முன்பு: கால்முன்னெலும்பு, கணுக்கால் எலும்பு, முழங்கை எலும்பில் உண்டான சிக்கலான எலும்புமுறிவு




ஜெபத்திற்கு பின்பு: அறுவைச் சிகிச்சை இல்லாமலேயே எலும்புகள் அனைத்தும் மறுசிருஷ்டிப்பின் வல்லமையால் இணைந்துவிட்டது.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com